அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 12/2005(X)

எனது இலக்கம் : EST-6/04/INS/1010-II
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.03.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அரச அலுவலர்களுக்கான புதிய காப்புறுதி திட்டத்தினை தாபித்தல் (அக்ரஹார)

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2005.05.18 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005 மற்றும் அதனுடன் இணைந்ததாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் தொடர்பில் அவதானத்தை ஈர்க்கின்றேன்.

02. அக்ரஹார காப்புறுதி முன்மொழிவு திட்டத்தின் சுகாதார பிரதிபயன் காப்பினை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற பிரதிபயன்களை நிலையாகப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்காக, பின்வரும் பிரகாரம், தற்போதுள்ள ஏற்பாடுகளை திருத்துவதற்கும் மற்றும் புதிய ஏற்பாடுகளை உள்வாங்குவதற்கும் 2026.02.09 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதன் பிரகாரம், பின்வருமாறு நிலவும் ஏற்பாடுகளை திருத்தம் செய்தல் மற்றும் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்குவது நடாத்தப்படும்.

3.1 திருத்தங்கள்.

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை | ஏற்பாடுகளை உள்ளடக்கிய பிரிவு | செய்யப்படும் திருத்தங்கள் |
|---|---|---|---|
| 1. | 2016.04.29 ஆந் திகதிய அரசாங்க | 03 | அக்ரஹார காப்புறுதி பிரதிபயன்களுக்காக மாதாந்த பங்களிப்புத் தொகையை, |

| | | | |
|---|---|---|---|
| | நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(VI) | | குறைந்தபட்சம் மாதாந்த பங்களிப்புத் தொகை ரூபா. 200/-, வெள்ளித் திட்டத்தின் கீழ் மாதாந்த பங்களிப்புத் தொகை ரூபா. 450/- மற்றும் தங்கத் திட்டத்தின் கீழ் மாதாந்த பங்களிப்புத் தொகை ரூபா. 750/- எனத் திருத்தம் செய்தல் |
| 2. | 2015.11.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(V) | இணைப்பு I இன் பகுதி II | தனிப்பட்ட சடுதியான விபத்துகள் மற்றும் இயற்கையான மரணக் காப்புறுதியின் நன்மைகளின் கீழ் கிடைக்கும் பிரதிபயன்களின் II இன் குறிப்பிடப்பட்டுள்ள அதிகப்படியான வயது எல்லை "கட்டாய ஓய்வு பெறச் செய்யும் வயது" எனத் திருத்தப்படுகின்றது. |
| 3. | 2016.04.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(VI) இன் உப பிரிவு 4:4 திருத்தி வெளியிடப்பட்டுள்ள 2017.10.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(VII) | 4:4 | இயற்கை மரணங்களுக்கா காப்பீட்டுப் பிரதிபலன்க பெற்றுக் கொடுக்கும் அதிகபட் வயது 70 ஆண்டுகள் என்பதுடன் ஏனைய காப்பீட்டுப் பிரதிபல உரித்துக்கள் ஆயுட்காலம் வ பெற்றுக்கொள்ள முடியும். |

3.2 2016.04.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(VI) இன் பிரிவு 06 ற்கு பின்னர் பின்வரும் புதிய பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன.

| **தொடரிலக்கம்** | **புதிய பிரிவு** | **ஏற்பாடுகள்** |
|---|---|---|
| 1. | 07 | அனைத்து அரச உத்தியோகத்தர்களின் அக்ரஹார உரித்துக் கொடுப்பனவுகள் 2026.04.01 ஆம் திகதி முதல் அக்ரஹார தரவுத் தொகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதால், அக்ரஹார தரவுத் தொகுதியில் பதிவு செய்வது கட்டாயமாகும் என்பதுடன், உத்தியோகத்தர்களுக்குரிய தகவல்கள் திருத்தப்படும் சந்தர்ப்பங்களில் உரிய தாபனங்களின் மூலம் தரவுத் தொகுதியை இற்றைப்படுத்துவதும் கட்டாயமாகும் (இது தொடர்பான அறிவுறுத்தல்கள் தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்தினால் வெளியிடப்படும்). |
| 2. | 08 | அக்ரஹார சுகாதார காப்புறுதி காப்பீட்டிற்காக சுகாதாரக் காப்புறுதி/ தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி தொடர்பான நியம விதிவிலக்குகளை நடைமுறைப்படுத்தல் (இவ் விதிவிலக்குகள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் தீர்மானிக்கப்படும்). |
| 3. | 09 | கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவருமே அரச உத்தியோகத்தர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில், நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தரே அக்ரஹார உரிமைக் கோரிக்கை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>மேலும்,<br><br>I. ஒரு பிள்ளைக்காக ஒரு சந்தர்ப்பத்தில் தொடர்புடைய ஒரு வகை நன்மைக்காக அக்ரஹார உரிமைக் கோரிக்கையைத் தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் ஒருவரால் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.<br><br>II. காப்புறுதிதாரர் மற்றும் வாழ்க்கைதுணையாகிய |

| | | |
|---|---|---|
| | | இருவருமே அரச உத்தியோகத்தர்களான எனினும் அசமத்துவமான காப்புறுதி முறைமைகளுக்கு பங்களிப்பு செய்துள்ள சந்தர்ப்பத்தில், காப்புறுதிதாரருக்கு மாத்திரம் உரித்தாகும் உரித்துக்கள் தவிர்ந்த ஏனைய பொதுவான நன்மைகளை (துணைவர் மற்றும் சார்ந்திருப்பவர்களுக்குக் கிடைக்கும்) அதிக உரித்துக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதிதாரரின் ஊடாக விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் அளித்தல். |
| 4. | 10 | வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது அக்ரஹார உறுப்பினர் மரணமடைந்தால், குறித்த உத்தியோகத்தரின் மரணத்திற்கு முன்னரான மருத்துவ உரித்து,<br><br>I. உத்தியோகத்தர் திருமணமானவர் எனின், வாழ்க்கைதுணைவருக்கு அல்லது பிள்ளைகளில் ஒருவருக்கு (ஏனைய தரப்பினரின் சம்மதத்தின் பேரில்) பெற்றுக் கொள்ள முடியும்.<br><br>II. உத்தியோகத்தர் திருமணமாகாதவர் எனின், பெற்றோரில் தாயோ அல்லது தந்தையோ ஆகிய இருவரில் ஒருவருக்கு (ஏனைய தரப்பினரின் சம்மதத்தின் பேரில்) பெற்றுக்கொள்ள முடியும். |
| 5. | 11 | உரிய பற்றுச்சீட்டுகளின் திகதியிலிருந்து அல்லது உத்தியோகத்தர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் குறித்த பற்றுச்சீட்டுகள் தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்திற்கு கிடைக்கப் பெறுதல் வேண்டும்.<br><br>I. பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்கள் 90 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட்டிருப்பின், அவ் விண்ணப்பங்களை பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>II. சாதாரண தபாலில் அல்லது கையளிப்பு மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் 90 நாட்களுக்குள் தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்திற்கு கிடைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | III. அக்ரஹார அங்கத்தவர் மரணித்திருப்பின், விண்ணப்பதாரர்களினால் உறுப்பினர் இறந்த நாள் முதல் 06 மாதங்களுக்குள் மரண உரிம ஆவணக்கோப்பினை தாபனத்தலைவரின் ஊடாக தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். |
| 6. | 12 | அக்ரஹார அங்கத்தவர் மூலம் உரிய காலப்பகுதிக்குள் தனது தாபனத் தலைவரிடம் கையளிக்கப்படும் விண்ணப்பங்களை, உரிய திகதிக்கு முன்னர் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பி வைப்பது தாபனத் தலைவருக்குரிய பொறுப்பாகும் என்பதுடன் அதற்கு பொருத்தமான முறைமையொன்றினை தயாரித்துக் கொள்வதற்கு தாபனத் தலைவரின் மூலம் வகைப்பார்த்துக் கொள்ளல் வேண்டும். |

04. மேற்படி திருத்தப்பட்ட ஏற்பாடுகள் அட்டவணை 3.1 மற்றும் புதிய ஏற்பாடுகள் அட்டவணை 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுடன், 2005.05.18 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005 மற்றும் அதற்கு விளைவாந்தன்மையாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் மாற்றமின்றி வலுவிலிருக்கும்.

05. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2026.03.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2699399
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ad-6-est@pubad.gov.lk